2023 மார்ச் 24]

ஒரே முடிவாக எடுக்கலாம் என்று நாங்கள் ஓர் ஏற்பாட்டை செய்திருக்கிறோம். துறை சார்பாக ஒவ்வொரு கோப்பினையும் ஆய்வு செய்து, அதை விடுவிப்பது நியாயமா, இல்லையா? நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அதில், ஒரேயொரு சிக்கல் இருக்கிறது. அதாவது, நாம் எடுக்கிற நடவடிக்கைமீது யாரும் தவறான குற்றச்சாட்டை சொல்லிவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு சரியான committee *அமைத்து, அந்த* committee *மூலமாக, அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வகையில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. இது, நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிற பிரச்சினை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆய்வுக்கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

பித்தளை பாத்திர தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***54655—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை பகுதியில் பித்தளை பாத்திர தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2023 மார்ச் 24

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கூவனூத்து ஊராட்சியில், பித்தளை பாத்திர தொழிலாளர்களுக்காக, தமிழ்நாடு அரசின் தொழில் ஆணையரகத்தின்கீழ், குரும்பபட்டி உலோகத் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் 1959 ஆம் ஆண்டு முதல், 75 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வந்தது. இந்த நிலையில், சங்க உறுப்பினர்களின் வயது முதிர்வு காரணமாகவும், ஆர்வமின்மை காரணமாகவும், கடந்த 4 ஆண்டுகளாக சங்கம் செயல்படாத நிலையில் இருக்கிறது. இந்தச் சங்கத்தில் பித்தளை தொழிலில் ஈடுபட்டு வந்த உறுப்பினர்களை ஊக்குவித்து, மீண்டும் இத்தொழிலைப் புதுப்பிக்கவும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்து சங்கத்தைத் தொடர்ந்து நடத்திடவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பித்தளை தொழிலுக்காக புதிதாக தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்தான் இன்று இந்திய தொழில் துறையின் முதுகெலும்பாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களெல்லாம், இந்தக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக பல பயன்களைப் பெறும்விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்தே, இது விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார். இந்த முயற்சி நல்ல முயற்சியாக இருக்கும். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னெடுப்பார்களா என்று மீண்டும் ஒருமுறை கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 24]

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களுடைய தலைமையில் அமைந்ததற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக, கடந்த நிதியாண்டில் 5 சிட்கோ தொழிற்பேட்டைகளை அமைத்து, இன்றைக்கு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற காலங்களில், பின்தங்கிய பகுதிகளில், எந்தெந்த பகுதிகளில் இந்த சிறு தொழில்கள் வளர வேண்டுமென்பதை எண்ணி, அந்தந்த பகுதிகளில் அமைக்க இருக்கிறோம். சில இடங்களில், குறிப்பாக, ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் பார்த்தீர்களென்றால், அரசு இடங்கள் இல்லை. பல பகுதிகளில் சிறு தொழில்கள் அதிகமாக வளர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில், தனியார் நிலங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை அரசின் மூலமாக நாங்கள் செய்து வருகிறோம். ஆக, எந்தெந்த பகுதிகளில் இந்த* MSME *தொழில் நிறுவனங்கள் அமைக்க வேண்டுமோ, அந்தந்த பகுதிகளில் நிச்சயமாக அரசு நிலம் இருந்தால் அதைக் கையகப்படுத்தி அமைத்துத் தருவோம். முக்கியமாக அங்கு தொழில் நிறுவனங்கள் வர வேண்டுமென்று விருப்பப்பட்டால், அந்தந்தப் பகுதிகளில் தேவைப்பட்டால் தனியார் இடங்களை விலைக்கு வாங்கிப் பெற்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை நிச்சயமாக நம்முடைய அரசு அமைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

புதைவடங்கள்

***1654—திரு. S. ராஜகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகரப் பகுதியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?